# கிளாடியோலஸ்

1. இலைப்பேன், த்ரிப்ஸ் சிப்ளக்ஸ்

**சேதத்தின் அறிகுறிகள்**

- பூக்கள் மற்றும் குமிழ்களும் உருக்குலைந்தும், நிறம்மாறியும் இருக்கும்.
- தாக்கப்பட்ட பூக்கள் மலராமல் இருக்கும்.
- பூக்களில் தாக்கப்பட்ட பகுதிகள் வெளிர் சாம்பல் நிறத்தில் இருக்கும்.

**பூச்சியின் விபரம்**

முட்டை : அழுக்கடைந்த வெண்மையான, அவரை வடிவமான முட்டை இலையின் திசுக்களுக்கு அடியில் இருக்கும்.

இலைப்பேன் : முதலில் பால் போன்ற வெண்மையானது பிறகு பழுப்பு நிறமானது. இறகுகளின் அடிப்பாகத்தில் குறுக்குப்படை இருக்கும்.

2. தேன் உறிஞ்சும் இலைப்பேன், த்ரிப்ஸ் ஃப்ளவஸ்

**சேதத்தின் அறிகுறிகள்**

- தாக்கப்பட்ட பூக்கள் சுருக்கங்களுடன் கருமையாக இருக்கும்.

**பூச்சியின் விபரம்**

- இளம் குஞ்சுகள் வெளிர் மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

இலைப்பேன்

- மஞ்சள் முதல் ஆரஞ்சு நிறத்தில் இருக்கும். கால்கள் மற்றும் இறக்கைகள் மஞ்சள் முதல் வெளிர் மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- 1 லிட்டர் தண்ணீரில் 2 மிலி மீதைல்டிமெட்டான் அல்லது டைமீதோயேட் கலந்து தெளிக்கவும்.
- மொட்டு விடுவதற்கும் முன்பு 1 லிட்டர் தண்ணீரில் 1.25 மிலி மாலத்தியான் (அ) கார்பரில் 2 கிராம் கலந்து தெளிக்கவும்.
- பூக்கள் மலரும் போது 1 லிட்டர் தண்ணீரில 1 மிலி மீதைல் பாரத்தியான் அல்லது எண்டோசல்ஃபான் 2 மிலி கலந்து தெளிக்கவும்.

4. நாவாய்ப்பூச்சி, லைகஸ் லீனியேலேரிஸ்

சேதத்தின் அறிகுறிகள்

- நாவாய்ப்பூச்சிகள் நுனித்தண்டில் மொட்டுகளுக்கு கீழ் சிறு துளையிட்டு நச்சு உமிழ்நீரை செலுத்தி செடியில் பாதிப்பை ஏற்படுத்தும்.

பூச்சியின் விபரம்

- இளம்குஞ்சுகள் - பச்சையானது
- நாவாய்ப்பூச்சிகள் செம்பழுப்பு நிறத்தில் நீள்வட்ட வடிவில் தட்டையாக இருக்கும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- வயலில் உள்ளக் களைகளை அகற்றவேண்டும்.
- பூ பூப்பதற்று முன்பு 1 லிட்டர் தண்ணீரில் 2 மிலி டைமீதோயேட் (அ) மீதைல் டிமேட்டான் கலந்து தெளிக்கவும்.